REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 7உ புதன் (20—4—55) ★ ★ வெளியீடு: சித்திரை 8உ வியாழன் (21—4—55) [இதழ் 264

இலங்கையிலிருந்து 20,000 பேர் திரும்பினர்!

சென்னை, ஏப். 19—

இலங்கையில் குடி உரிமை மறுக்கப்பட்டு, அதனால் இந்தியா திரும்ப வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, கடந்த ஜூன் திங்கள் முதல் தேதியிலிருந்து இந்த ஆண்டு ஏப்ரல் திங்கள்வரை சுமார் 20,000 என்று தெரிய வருகிறது.

இலங்கைக்கு மீண்டும் திரும்பிச்செல்ல உதவும் 'விசா'க்கள் ஏதுமின்றி இவர்கள் வந்துள்ளனர்.

கடந்த ஜூன் முதல் டிசம்பர்வரை இம்மாதிரி வந்தவர்கள் எண்ணிக்கை 13,000 ஆகும் என்றும் கூறப்படுகிறது.

'குற்றத்தைத் தடுக்கவா? என்னைப் பழி வாங்கவா?'

'பத்திரிகையைத் தடுப்பதை விட்டு சிறையிலடைத்து வைத்திருப்பதேன்'

இந்தியப் பேரரசை ஒரு பத்திரிகாசிரியர் சாடுகிறார்

விடுதலை மனுமீது சுப்ரீம் கோர்ட்டின் அறிக்கை

புதுடில்லி, ஏப். 18—

பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டிருக்கும் 'புல்ஸ் ஐ' என்ற ஆங்கில இதழின் ஆசிரியரான ஆனந்த சிங் என்பவரை ஏன் விடுதலை செய்ய உத்தரவிடக்கூடாது என்பதற்கான காரணம் காட்டுமாறு, சுப்ரீம் கோர்ட், இந்தியப் பேரரசிற்கு ஒரு அறிக்கை அனுப்பி இருக்கிறது.

தொடர்ந்து தன்னைக் காவல் கைதியாக வைத்திருப்பதை எதிர்த்து அரசியல் சட்டம் 32-வது பிரிவுப்படி, மேற்படி ஆனந்த சிங், சுப்ரீம் கோர்ட்டில் இரண்டாம் முறையாக வழக்குத் தொடுத்திருந்தார். அதன் விளைவாகத்தான், சுப்ரீம் கோர்ட் மேற்குறித்த அறிக்கையை இந்தியப் பேரரசிற்கு அனுப்பி இருக்கிறது.

அரசியல் சட்டம் அதே பிரிவின்படி ஏற்கனவே முதல் முறையாக ஆனந்த சிங்கால் போடப்பட்ட விடுதலை மனு சுப்ரீம் கோர்ட்டால் தள்ளப்பட்டு இருக்கிறது.

'இந்தியத் துணைக்கண்டத்தில் தங்கியுள்ள பிறநாட்டு சர்க்கார் பிரதிநிதிகளின் தனிப்பட்ட பிரச்சினைகளைத் தன் பத்திரிகையில் வெளியிடுவதாக அச்சுறுத்தி, அவர்களிடமிருந்து பணம் பறித்து வருவதை மேற்படி ஆசிரியர் தொழிலாகக் கொண்டிருந்தார்,' என்று, இந்தியப் பேரசு குற்றஞ்சாட்டி, ஆனந்த சிங்கை பாதுகாப்புக் கைதியாக 1954 நவம்பர் 24-ந் தேதி முதல் அடைத்து வைத்திருக்கிறது.

'ஆனந்த சிங்கை விடுவிக்கக் கூடாது,' என்பதற்குரிய காரணமாக, அரசாங்கச் சார்பில், மேற்படி ஆசிரியர் விடுவிக்கப்பட்டபோதிலும் மீண்டும் பழைய குற்றத்தையே செய்யமாட்டார் என்று நம்புவது முடியாது எனவும், எனவே, அவரை விடுவிக்கக் கட்டளை பிறப்பிக்கக் கூடாது எனவும், காட்டப்பட்டுள்ளது.

ஒரு பத்திரிகையைப் பிரசுரிப்பதையும், வெளியிடுவதையும் தடுக்கும் உரிமை எப்பொழுதும் ஒரு அரசாங்கத்திற்கு இருக்கிறது எனவும், அந்த உரிமையின்படி தனது பத்திரிகையையும், விரும்பினால், அரசாங்கத்தால் தடுத்துவிட முடியும் எனவும், தனது பத்திரிகைக்குத் தடை விதிப்பதற்குப் பதிலாகத் தன்னையே தொடர்ந்து காவலில் வைத்திருப்பதானது அரசாங்கத்தின் பழி வாங்கும் இயல்பைக் காட்டுகிறதேயல்லாது குற்றத்தைத் தடுக்கும் போக்கைக் காட்டுவதாக இருக்கவில்லை எனவும், எனவே, தன்னை விடுவிக்க உத்தரவிட சுப்ரீம் கோர்ட் முன்வர வேண்டுமெனவும், ஆனந்த சிங், தனது இரண்டாவது விடுதலை மனுவில் குறிப்பிட்டுள்ளார். அதன் எதிரொலியாகத்தான், இந்தியப் பேரசிற்கு சுப்ரீம் கோர்ட் 'அறிக்கை' அனுப்பியிருக்கிறது.

'போனஸ்' கோரி வேலை நிறுத்தம்

பின்னி எஞ்சினீயரிங் தொழிலாளர் நடவடிக்கை

சென்னை, ஏப். 19—

பின்னி எஞ்சினீயரிங் தொழிலக ஊழியர்கள், குமாஸ்தாக்கள் உட்பட சுமார் 700 பேர், 1954-ம் ஆண்டிற்கு தங்களுக்கு போனஸ் தரப்பட வேண்டும் என்பதற்காக இன்று உள்ளிருப்பு வேலை நிறுத்தம் ஆரம்பித்தனராம்.

தாங்கள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக உரிய முன் அறிவிப்புகளை தொழிலக நிர்வாகிகளுக்குத் தந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

ரஷ்யாவிலிருந்து உருக்கு இறக்குமதி

ஆண்டுதோறும் 45 லட்சம் டன்: இந்தியப் பேரரசு திட்டம்

தனிப்பட்டோரும் இறக்குமதி செய்ய அனுமதி

கல்கத்தா, ஏப். 18—

வரும் ஆண்டுகளில் சோவியத் ரஷ்யாவிலிருந்து உருக்கு இறக்குமதி செய்ய இந்தியப் பேரரசு உத்தேசித்திருப்பதாகத் தெரியவருகிறது.

சமீப காலம் வரையில் இந்தியாவிற்கு உருக்கு ஏற்றுமதி செய்யும் சில நாடுகளில் ஜப்பானும் ஒன்றாக இருந்துவந்தது.

ரஷ்யாவிலிருந்து உருக்கு இறக்குமதி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு இரும்பு உருக்கு கண்ட்ரோலருக்கு இந்தியப் பேரரசு உத்தரவிட்டுள்ளதாம்.

முதல், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டங்களில் இடம் பெறும் தொழில் வளர்ச்சித் திட்டங்களுக்கு உபயோகப்படுத்துவதற்காகவே இந்த உருக்கு உபயோகிக்கப்படும் என்று தெரியவருகிறது.

தனிப்பட்டோர்கூட தங்களுக்குத் தேவையான உருக்கை ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளவும் அனுமதிக்கப்படுவார்களாம்.

ஆண்டுதோறும் 45 லட்சம் டன் வீதம் இன்னும் நான்கு அல்லது ஐந்தாண்டுகளுக்கு ரஷ்ய உருக்கு இறக்குமதி செய்யப்படும் என்று தெரிகிறது.

விஞ்ஞானமேதை ஐன்ஸ்டின் மூளை!

ஆராய்ச்சிக்குப் பயன்படும்

பிரின்ஸ்டன், (நியூஜெர்சி) ஏப். 19—

இயற்கை எய்திய விஞ்ஞான மேதையான டாக்டர் ஆல்பர்ட் ஐன்ஸ்டின், ஏற்கனவே தமது மூளையை மருத்துவ ஆராய்ச்சிக்குப் பயன்படுத்த அனுமதி கொடுத்திருக்கிறாராம்!

முக்கியமான உறுப்புகளைத்தும் அவருடைய உடலினின்றும் பிரித்தெடுக்கப்பட்டு மருத்துவ ஆராய்ச்சிக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளனவாம்.

நியூயார்க்கிலுள்ள டாக்டர் ஹாரி சிம் மர்மன், டாக்டர் ஐன்ஸ்டினின் உறுப்புகளை மருத்துவ ஆராய்ச்சி செய்வாராம். இந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் டாக்டர் ஐன்ஸ்டினின் ஒப்புதல் ஏற்கனவே பெறப்பட்டுள்ளதாம்.

★

ஐன்ஸ்டின் எச்சரிக்கை!

"அணுசக்தி ஆயுதங்களை வைத்துக்கொண்டு, அவைகளை எந்த வகையில் உபயோகித்தாலும் அழிவுதான் ஏற்படும்"

என்று டாக்டர் ஐன்ஸ்டின், தான் இயற்கை எய்துவதற்கு முன்பு ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு பற்றி பண்டித நேருவுக்கு அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சேர்ந்தாராம் - விலகினாராம்!

வேலூர் நகரசபைத் தலைவரான திரு. சீதாபதி அவர்கள், காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராகக் கடந்த 9—4—55 அன்று சேர்ந்துவிட்டதாக வெளிவந்த செய்தி வேலூர் மக்களிடை பெரும் பரபரப்பை உண்டுபண்ணி விட்டது என்றும், தான் காங்கிரசில் சேர்ந்தது மக்களுக்கு அருவருப்பைத் தந்திருப்பதாக உணர்ந்த திரு. சீதாபதி அவர்கள், 18—4—55 அன்று காங்கிரசிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டார் என்றும், இனி, தான், நகர அபிவிருத்திக் கழகத்தில் சேர்ந்து பாடுபடுவதாக அறிவித்திருப்பதாயும் தெரியவருகிறது (ந. நி.)

இலங்கையில் தமிழ் மாநிலம்?

தமிழர்கள் ஒன்றுபட்டு அமைக்கக் கோரிக்கை

மக்கள்சபை உறுப்பினர் வணியசிங்கம் பேச்சு

கொழும்பு, ஏப். 19—

"இலங்கையில் வாழும் தமிழ் மொழி பேசும் மக்கள் எல்லாம்—ஆந்திர மக்கள் தனி மாநிலக் கோரிக்கைக்காக ஒன்றுபட்டதுபோல்—தமிழ் மாநிலம் ஒன்று இலங்கையில் அமைப்பதற்கு, தங்கள் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட வேண்டும்," —என்று, இலங்கை மக்கள் சபை உறுப்பினரான சி. வணியசிங்கம் என்பவர் கூறியிருக்கிறார்.

தமிழரசுக் கட்சிக் கூட்டமொன்றில் பேசுகையில் அவர், தங்கள் கட்சி, இலங்கையில் ஒரு 'சமஷ்டி' சர்க்கார் ஏற்படுத்த வேண்டுமென்பதையும், அந்த சர்க்காரில் சிங்கள — தமிழ் மாநிலங்கள் இருக்க வேண்டுமென்பதையும் நோக்கமாகக் கொண்டது என்றும் கூறியிருக்கிறார்.

இப்போது இலங்கையில் உள்ள சர்க்கார், இலங்கை வாழ் தமிழ் மக்களின் அரசியல் பலத்தைக் குலைத்துவிட தங்கள் செய்கைகளால் முயன்று வருகின்றனர் என்றும், எவ்வளவு அதிகமாக தமிழர்களை வெளியேற்ற முடியுமோ அவ்வளவுக்கு அவர்களை வெளியேற்றிவிட்டு, இலங்கையில் தமிழர்களை மிகச் சிறுபான்மையினராக்கி பலம் குன்றச் செய்வதற்கு இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை உபயோகப்படுத்தி வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

7-அம்சக் கோட்பாடு ஒன்றைச் சமர்ப்பித்து, அவை, 'சமாதானத்தின் 7-தூண்கள்' என பாக். பிரதமர், பாண்டுங் மாநாட்டில் கூறினார்.

பாண்டுங்கில் பலத்த மழை

இடியும், புயல் காற்றும் விளைவித்த சேதம்

பாண்டுங், ஏப். 19—

பாண்டுங்கில் இன்று பலத்த மழையும் இடியும், புயல் காற்றும் வீசி பலத்த சேதங்கள் விளைவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

பல வீடுகளின் கூரைகள் அப்படியே ஆகாயத்தில் பறந்தனவாம்; தெருவெல்லாம் வெள்ளக்காடாகக் காட்சி தருகின்றனவாம்.

மாநாட்டின்போதே இந்த இடி மின்னல், மழையின் உச்ச நிலை பெற்றதாயும், பிரதிநிதிகள் அனைவரும் மழையில்சொட்டச்சொட்ட நனைந்து கொண்டிருந்தனரென்றும் தெரிகிறது. மழையினால் ஏற்பட்ட பேரிரைச்சலினால் மாநாட்டு மண்டபத்தில் சொற்பொழிவுகளைக் கூட ஒருவராலும் கேட்க முடியவில்லை.

மாநாட்டு மண்டபத்தின் முன்னர் ஆறு அங்குல உயர தண்ணீர் ஏரிபோல் தேங்கிக் கிடக்கதாம்.

வேலை நிறுத்தத்தில் 200 பஸ்கள் சேதம்!

பம்பாய் 'பெஸ்ட்' கம்பெனியைச் சேர்ந்த பஸ் தொழிலாளர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்ததை ஒட்டி ஏற்பட்ட கலவரங்களினால் சுமார் 200 பஸ்களுக்கு சேதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பஸ்களின் கண்ணாடி ஜன்னல்கள் உடைக்கப்பட்டிருந்தனவாம். டயர்கள் பலவும் சேதமுற்றிருந்தனவாம்.

டிராம் கார்களின் 'பிரேக்'குகள் சேதப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பெரிய விபத்துக்கள் எதும் நேராதபடி தகுந்த சமயத்தில் பார்த்துக்கொள்ளப்பட்டதாம்.

டிக்கெட்டில்லாமல் பிரயாணம் செய்ததால் ஏற்பட்ட நஷ்டம் முதலியன இன்னும் கணக்கிடப்படவில்லையாம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை
சென்னை 20—4—'55 புதன்

புரட்சிக்கு வித்தா?

லெப்பாயிட் — அவள்தான் மனித இனத்தின் 'கசப்பான' அனுபவங்களில் ஒன்முன பிரெஞ்சுப் புரட்சியின் போது, பிரெஞ்சு நாட்டு மன்னனுயிருந்த பதினுன்காம் லூயியினுடைய மனைவி; அரண்மனை உபபரிகையில் தன் கணவனுன மன்னனுடன் நின்று கொண்டிருக்கிருள்.

அரண்மனைக்கு வெளியே 'பசி, பசி' என்று துடித்து நிற்கும் உருவங்கள் ஆயிரக் கணக்கில் கூடி, மன்னனிடம் தங்களின் குறைகளை முறையிட நின்று கொண்டிருக்கின்றனர்.

"என்ன வேண்டுமாம் அவர்களுக்கு?"—மன்னனிடம் கேட்கிருள், லெப்பாயிட்!

"என்னவா? உண்பதற்கு ரொட்டி இல்லையாம் அவர்களுக்கு" — பதில் தருகிருன் மன்னன்.

"ரொட்டி கிடைக்காவிட்டால் என்ன? 'கேக்' சாப்பிடட்டுமே, அவர்கள்,"—மக்களுக்கு 'உபதேசம்' தருகிருள் மகாராணி!

மனிதஇனத்தின் போராட்ட வரலாற்றில் புதியதோர் அத்தியாயத்தை செங்குருதியால் எழுதிய பிரெஞ்சுப் புரட்சிக்கு வரலாற்று வல்லுனர்கள் கூறுகிறபடி — மதவாதிகள், மன்னன், அதிகாரிகள், ஆகியோர் விளைவித்த எல்லைமீறிய தொல்லைகள் —'இல்லை-இல்லை' என்ற வறுமைப் பல்லவி—இன்னும் இவைபோன்ற எத்தனையோ காரணங்கள் இருப்பினும், வாழ்விழந்து வாடி வதங்கி நின்ற மக்கள் மீது, லெப்பாயிட் வீசிய திமிரான சொற்களும் ஒரு காரணம் என்பதை, எவரும் மறுத்துக் கூறிவிட முடியாது.

★

"பால்—அதிலும் ஆவின் பால்—காலையிலும், மாலையிலும் ஆழாக்கு அருந்தினுல் ஆரோக்கியமும், பலமும் பெற்று விளங்கலாம், மக்கள்!"

"பலமின்றி, போதுமான உடல் வளர்ச்சியின்றி நலம் குன்றிப் போயிருக்கும் மக்கள் திடகாத்திரமானவர்களாகவும், தேகாரோக்கியம் மிகுந்தவர்களாகவும்விளங்குவதற்கு, பலவகை உணவுச் சத்துக்களும்கொண்ட பாலை அருந்துவதே வழியாகும்; எனவே, ஏராளமான அளவில் ஆவின் பால் அருந்துங்கள்; ஆரோக்கியமாக வாழுங்கள்,"

என்று சென்ற வாரம் சென்னையில் கொண்டாடப்பட்ட 'பால் தின' விழாவில் கலந்து கொண்ட அமைச்சர்கள் பலரும் பகன்றிருக்கின்றனர்.

'பால் நல்ல சுவையுள்ளது மட்டுமல்ல—பலனுள்ள உணவுங் கூட,' என்பதை சாதாரண மக்களும் நன்கறிந்தே இருக்கின்றனர்.

பால் தரும் பலன் குறித்தோ அல்லது அதன் சுவை குறித்தோ மக்களுக்கு அரசாங்கம் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை; ஆனுலும், மந்திரிகள் கூறியிருக்கின்றனர்—பால் அருந்துமாறு!

பாலின் சுவையையும், பலனையும் விளக்கிக் கூறி, 'மக்கள் எல்லோரும் பெரும் அளவில் பால் அருந்த வேண்டும்,' என்றும் அமைச்சர்கள் 'உபதேச பாணி'யில் பேசியிருக்கின்றனர்!

'மக்கள் பால் அருந்தாமலிருப்பதற்கு, பாலின் அருமையை அவர்கள் அறியாமலிருப்பதல்ல,' என்ற உண்மை மந்திரிகளுக்குத் தெரிந்தே இருக்கிறது.

ஆனுலும், பாலின் அருமையை அழகுறக் கூறி, 'அருந்துங்களேன் பால்; மருந்தும் மாயமும் கேட்கும் நோயும் நொடியும் நாடாது உங்களை,' என்று உபதேசித்திருக்கிருர்கள்!

இந்த நாட்டு மக்களில் பெரும்பாலானேர், 'வாழ்க்கை எட்டில் ஒரு நாள்,' எனும் ஒரு பக்கத்தைப் புரட்ட, படாதபாடுபடுகின்றனர்!

பகல் பன்னிரண்டு மணி; கோடை கால வெய்யில் நகர வீதிகளைச் சூடேற்றி, 'தார்' கொப்புளங்களை உண்டுபண்ணுகிறது; கடற்கரையிலிருந்து வரும் காற்றும் அனலெனச் சுடுகிறது; அந்த வேகாத வெய்யிலில் பின்னிருந்து இருவர் முட்டித் தள்ள, முன்னிருந்து இருவர் முதுகெலும்பு ஒடிய முக்கி முனகிக் கொண்டே பார வண்டியை இழுத்துச் செல்கின்றனர்— கொதிக்கும் வீதி தங்கள் பாதங்களில் உண்டுபண்ணும் கொப்பளங்களையும் பொருட்படுத்தாது — பாட்டாளிகள்!

என்ருலும், இப்படி நாள் முழுதும் வண்டி இழுத்துப் பெறும் கூலி, அந்தப் பாட்டாளிகளின் குடும்பத்திற்கு, கால் வயிற்றுக் கஞ்சிக்குப கடித்துக்கொள்ள மிளகாய்க்கும் காணுவதில்லை; கந்தல் துணிதான் அவர்களின் மானங் காக்கும்; கட்டாந்தரைதான் —நடைபாதைதான் அவர்களது 'ராஜபவனம்!'

தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் 'கைக்கும் வாய்க்கு'மான வாழ்வுக்கு போதியதாயில்லை!

விவசாயிகள், வேதனையின் சின்னங்கள்!

வெள்ளை வேட்டியுடன் காணப்படுவார்கள் — ஆனுல், 'பட்டினியாயிருந்தேன்' என்று வெளியே சொல்லவும் முடியாத நிலையில் உழல்பவர்கள், நடுத்தர மக்கள்!

'நாகரீகமாக வாழவேண்டும்' என்ற போலிப்பெருமைக்காக, தங்கள் கண்முன் தெரிகிற முழு வாழ்வையும் அடைவதற்கான வழியில் செல்ல சற்றும் துணிவின்றி, அந்த முழு வாழ்வின் பெரு நிழலில் மறைந்துகொண்டு, வாழ்வுக்காக ஏங்கி ஏங்கி மனம் புழுங்கிச் சாகும் அவல நிலையில்தான் நடுத்தர மக்கள் இருக்கின்றனர்!

எஞ்சிய மக்களை, 'வேலை இல்லை' என்ற வேதனை கொன்று கொண்டிருக்கிறது.

இப்படி, நாட்டில் பல மக்களும், 'உயிர் வாழ்ந்தால் போதும் இப்போது; உயர் வாழ்வு பிறகு,' என்றெண்ணும் நிலையிலிருக்கும்போது, 'நாட்டவரே! பால் அருந்துவீர்; பயன் பெறுவீர்; பலவான்களாவீர்,' என்று மந்திரிகள் கூறுகிருர்கள்.

வாழ்விழந்துவிட்ட மக்கள் 'வாழ்வு கிடைக்குமா?' என்று ஏங்கித் தவிக்கையில், சென்னை மந்திரிகள்—அவர்களுக்கு வாழ்வு தர முற்பட வேண்டிய பொறுப்புடையவர்கள்—'பால் அருந்துங்கள் பால்,' என்று பகன்றிருக்கின்றனர்.

அவர்கள் முழு வாழ்வு பெற்றுவிட்ட பிறகு — அல்லது, அவர்கள் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றும் தங்கு தடையின்றி கிடைக்குமாறு செய்தான பிறகு, 'பால் அருந்துங்கள் ஏராளமாக,' என்று கூறுவதில் பொருளுண்டு. கஞ்சிக்கும், ஊறுகாய்க்கும், தெருவில் வீசி எறியப்படும் எச்சில் இலைகளை நம்பிக் கிடக்கும் சிலரையும், உழைத்தும் பலன் பெருது பகல் பட்டினி, இராப் பட்டினியாகப் பரிதவிக்கும் பாட்டாளிகளையும், தொழிலாளர்களையும், விவசாயிகளையும், நடுத்தர மக்களையும் பார்த்து, 'ஏராளமாகப் பால் அருந்துங்கள்,' என்று கூறுவது, "இந்நாட்டிலும் பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திடப்படுகிறதா?" என்று நலிந்துபோன மக்களின் உள்ளத்தில், எங்கோ ஒரு மூலையிலிருந்து கேள்வி எழும்புகிறது!

எதிர்க் கட்சியினருக்கு அச்சுறுத்தல்!

முதலமைச்சர் போக்கு கண்டு வியப்பு

சாந்திகார், ஏப். 19—

லஞ்சக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஜெகத்—நாராயண் என்ற மந்திரி, எஞ்சியுள்ள தமது போக்குவரத்து இலாகாப் பொறுப்பினின்றும்கூட விலகிக்கொள்ள வேண்டுமென்ற எதிர்க்கட்சியினரின் கோரிக்கையை, தாம் ஆதரிப்பதாக ஸ்ரீராம் ஷர்மா என்ற பஞ்சாப் முன்னுள் மந்திரி கூறியிருக்கிருர்.

பஞ்சாப் முதன் மந்திரியான பீம்சேன் சச்சார், 'எதிர்க் கட்சியினர், மந்திரி மீது சுமத்தியுள்ள லஞ்சக் குற்றங்களை நிரூபிக்காவிட்டால், அவர்கள் பாதுகாப்புப் பெறமாட்டார்கள்,' என்று திரும்பத் திரும்பக் கூறுவதுகண்டு தாம் ஆச்சரியப்படுவதாக ராம் ஷர்மா தெரிவித்துள்ளாராம்.

மதமாற்ற வேலைகளில் இத்தாலியப் பாதிரிகள்?

இந்தியாவிலுள்ள பல இத்தாலியப் பாதிரிமார்கள், மக்களை மதம் மாற்றும் வேலையில் ஈடுபட்டுள்ளதாகப் பல தகவல்கள் சர்க்காருக்குக் கிடைத்துள்ளதாக மத்திய உதவி தொழிலாளர் அமைச்சர் கூறியிருக்கிருர்.

சவுக்கடி தண்டனை நீங்கிவிடும்

குற்றவாளிகளை சவுக்கால் அடிக்கும் தண்டனையை ரத்து செய்வதற்கு அரசாங்கம் யோசித்துள்ளதாகவும், அதற்கான மசோதா ஒன்றை சர்க்கார் கூடிய சீக்கிரமே கொண்டுவரும் என்றும் மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

கவர்னர்-ஜெனரலின் அதிகாரவரம்பு

கீழ் நீதிமன்றங்களுக்கு உத்திரவு!

பெடரல் நீதிமன்ற பரிசீலனை

லாகூர், ஏப். 18—

"செல்லுபடியாகாதென்று தீர்ப்பளிக்கப்பட்ட சில சட்டங்களைச் செல்லுபடியாக்க இத்திங்கள் 16-ந் தேதியன்று ஒரு அவசரப் பிரகடனத்தையும், வேறு சில அதிகாரங்களையும் மேற்கொண்டு இரண்டு பிரகடனங்களை பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் பிறப்பித்துள்ளதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்டுள்ள எந்த வழக்கின் மீதும், எந்த ஒரு நீதிமன்றமும் தீர்ப்பளிக்கக்கூடாது," என்று பாகிஸ்தான் பெடரல் நீதிமன்றம் இடைக்கால உத்திரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது

பாக். கவர்னர்-ஜெனரலான குலாம் முகம்மது தாக்கல் செய்துள்ள இரண்டு மனுக்களின் பேரிலேயே இந்த இடைக்கால உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டின் நிர்வாகம் பற்றி அரசியல் நிர்ணய சபை சட்டம் இயற்று முன்னர், கவர்னர்—ஜெனரலின் அதிகாரம் என்ன என்றும், ஒரு சட்டத்தைக் கவர்னர்—ஜெனரல் செல்லுபடியாக்குவது சரியா — தப்பா என்பதை புதிய அரசியல் நிர்ணய சபை தீர்மானிக்கும் வரையிலும் தமது அதிகாரங்கள் என்ன என்றும் அவர், அம்மனுக்களில் குறிப்பிட்டுக் கேட்டிருக்கிருர் எனத் தெரிகிறது.

'பெடரல்' நீதிமன்றம், இது காரணமாகச் சட்டப் பிரச்சினைகளையும் பரிசீலனை செய்யும் என்று கூறப்படுகிறது.

மணிமுத்தாறு அணைக்கட்டு!

சில விபரங்கள்

திருநெல்வேலி—

மணிமுத்தாறு அணைக்கட்டின் மொத்த நீளம் 11,360 அடியாகும் அணையின் மத்திய பாகத்தில் 1,230 அடி நீளத்திற்குக் 'காங்கிரீட்'டினுலான முகப்பும், இடது புறத்தில் 5,460 அடி நீளமுள்ள மண் அணையும், வலது புறத்தில் 4,670 அடி நீளம் கொண்ட மண் அணையும் கொண்டிருக்கும்.

மத்தியிலுள்ள முகப்பு, தரைமட்டத்திலிருந்து 150 அடி உயரத்திலிருக்கும்; அனேகமாக அணைக்கட்டில் அஸ்திவாரம் வெட்டப்பட்டு நீர் சுரக்காதவாறு அடைக்கப்பட்டுள்ளது. மற்றுமுள்ள மண் அணைகளைக் கெட்டிப்படுத்தும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

சென்ற மார்ச்சு திங்களில் 56,55,000 அடி மண் தோண்டப்பட்டு அணையில் போடப்பட்டது; இயந்திரங்களின் உதவியைக் கொண்டு தோண்டி எடுத்துப் போடப்பட்ட அந்த மண் 37,70,000 கன அடி மண் அணையாகக் கெட்டிப்படுத்தப்பட்டது.

அணைக்கட்டுப் பகுதிகள் 14 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. சென்ற மாதத்தில் மட்டும் 3,85,200 கன அடிக்கு சிமெண்டு வேலைகள் நடைபெற்றிருக்கின்றன.

இந்த அணைக்கட்டு வேலைக்கு மதிப்பிடப்பட்டுள்ள செலவுத் தொகை ரூ. 4 கோடியில், இது வரையிலும் உத்தேசமாக ரூ 2.38 கோடி செலவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட இந்தத் தகவல்கள் அனைத்தையும், நெல்லையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாதாந்திரக் கூட்டத்தில் நெல்லை மாவட்டக் கலெக்டர் கூறியிருக்கிருர்.

கீரையோ கீரை!

சென்னை, ஏப். 18—

'வைடமின்' போன்ற உணவுச் சத்துக்கள் அதிகம் கொண்ட 'தவசைக் கீரை' எனப்படும் புதுவகைக் கீரை ஒன்றை, சென்னை சர்க்கார் விவசாய இலாகா கண்டுபிடித்துள்ளதாம்!

இவ்வகைக் கீரை கண்ணனூரில் ஏராளமாகக் காணப்படுவதாகவும், அதைப் பிரபல்யப்படுத்துவதில் சர்க்கார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், விவசாய இலாகா டைரக்டர் தெரிவித்துள்ளார்.

அக்கீரை ஏழை மக்களுக்கு மிக நன்மை பயப்பதாக இருக்குமாம்.

ஏழைகள், இந்தக் கீரையும் தட்டுப்படாமல் தேவையான அளவுக்குக் கிடைக்குமோ—கிடையாதோ என்று கவலைப்பட வேண்டியதில்லை—ஏனெனில் அச்செடிக்கு அழிவே கிடையாதாம்! இலைகளைக் கொடுத்துக் கொண்டே இருக்கும் 'சாகா வரம்' பெற்றதாம்!

'முட்டைக் கோஸ்,' 'காலி பிளவர்' ஆகியவற்றிலுள்ளதைக் காட்டிலும் உலோக சத்தும், வைடமினும் இதில் அதிகம் இருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

கைத்தறி துணிகளை பளபளப்பாக்கும் தொழிற்சாலை

ஈரோடில் கட்டப்படுகிறது

சென்னை மாநிலத்தில் கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக்காக ஈரோடில், ரூ 5.6 லட்சம் செலவில், துணிகளை அழுத்தி பளபளப்பாக்கும் தொழிற்சாலை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இந்தத் தொழிற்சாலை கட்டும் வேலை முடிவுறும் தருணத்தில் இருக்கிறதென்றும், அனேகமாக இந்த ஆண்டுக் கடைசியிலேயே தனது வேலையை ஆரம்பிக்குமென்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இந்தத் தொழிற்சாலையின் உதவியால், கைத்தறித் துணிகளை பார்ப்பதற்கு அதிகக் கவர்ச்சிகரமானதாக்க முடியுமாம். இதனுல், கைத்தறித் துணிகளின் விற்பனையும் ஆலைத் துணிகளின் விற்பனையுடன் போட்டி போட முடியும் என்று தெரிகிறது.

இத்தொழிற்சாலைக்கான செலவில் ரூ. 2,15,700-ஐ மத்திய சர்க்கார் மானியமாகத் தந்துள்ளதாம்; மீதித் தொகையில், மாநில சர்க்கார் ரூ 1,40,000-மும், மற்றச் செலவுகளை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளனவாம்

சென்ற மார்ச்சுத் திங்கள் இறுதி வரையிலும் மேற்படி சங்கம் ரூ. 4,84,667 செலவிட்டுள்ளதாம். மத்திய சர்க்காரிடமிருந்தும், மாநில சர்க்காரிடமிருந்தும் அச்சங்கத்திற்குக் கிடைத்துள்ள தொகையோ ரூ 79,124 தான்.

இத்தொழிற்சாலையின் கட்டிட அமைப்பு வேலைகள் யாவும் பூரணமாகி, இந்தியக் கம்பெனிகளிடம் வாங்கிய இயந்திரங்களும் பொருத்தப்பட்டு விட்டனவாம். வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ள இயந்திரங்களைப் பொருத்துவதற்கென அஸ்திவாரம் போடப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

நோய்க்கிருமி எதிர்ப்பு மருந்துகள் இறக்குமதி

சுங்கவரிகள் மூலம் கிடைத்த தொகைகள் மதிப்பு

இந்தியாவில், 1954 எப்ரல் திங்களிலிருந்து 1955 ஜனவரி திங்கள் வரையுள்ள காலத்தில், நோய்க் கிருமி எதிர்ப்பு மருந்துத் தயாரிப்புகளின் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட சுங்க வரிகளின் மூலம் கிடைத்த வருமானம் மொத்தம் ரூ. 63,34,115 என்றும், அதே காலத்தில், அறுவை சிகிச்சைக் கருவிகளின் இறக்குமதியின் மூலம் சுமார் ரூ. 11 லட்சம் கிடைத்தது என்றும் மக்கள்சபையில் அறிவிக்கப்பட்டது

'மகாபஞ்சாப்' கோரிக்கைக்கு எதிர்ப்பு

"சீக்கியர்களுக்குப் பாதுகாப்பு பஞ்சாப் மொழி மாநில அமைப்பில் மட்டுமே கிடைக்கும்"

மாஸ்டர் தாராசிங் விளக்கம்

அமிர்தசரஸ், ஏப். 17—

"சீக்கிய சமூகத்தினரை அழித்தொழிக்க பஞ்சாப் சர்க்கார் முயற்சிக்கின்றனர்; மொழிவழி அமையும் பஞ்சாப் மாநிலம் சீக்கிய மதம் பாதுகாக்கப்படுவதற்கு மிக அவசியமாகத் தேவை."

''பஞ்சாப் சுபா' கோஷத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை சர்க்கார், வருகிற 24-ந் தேதிக்குள் நீக்காவிட்டால், அகாலி தளம் போராட்டத்தில் ஈடுபடும்,"

என்று, சிரோமணி அகாலி தளத் தலைவரான மாஸ்டர் தாரா சிங் அறிவித்திருக்கிறார்.

சென்ற வியாழனன்று இங்கு நடைபெற்ற இந்து — அகாலி மோதுதல்களினால் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகளைப் பரிசீலிக்க அகாலி தளத்தின் செயற்குழுக் கூட்டம், வருகிற 24-ந் தேதியன்று நடைபெற இருக்கிறது. அக்கூட்டத்தின் போதுதான் போராட்டம் பற்றிய முடிவுகள் மேற்கொள்ளப்படுமென்று கருதப்படுகிறது.

"அகாலி தளம் மேற்கொள்ளவிருக்கும் எதிர்ப்பு நடவடிக்கைகள் எதுவுமே, தங்கள் சகோதரர்களான இந்துக்களைப் பாதிக்காது; ஆனால் சீக்கியர்களின் மதக்கோட்பாடுகளைக் கருவறுக்கும் காங்கிரசிற்கு எதிராகவேதான் நடைபெறும்"

என்று, மாஸ்டர் தாராசிங் இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

57 பேர் கைது

'பஞ்சாப் சுபா' கோஷத்தை முழக்கிச் சென்றதற்காக—அதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையுத்தரவை மீறியதற்காக 2 அகாலிகளும், அதற்கு எதிர் கோஷத்தை முழக்கிச் சென்றதற்காக 10 இந்துக்களும், அமிர்தசரஸ் நகரில் போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இத்துடன், இதுவரையில் மொத்தம் 57 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

சென்ற வியாழக்கிழமையன்று, 'பஞ்சாப் சுபா' கோஷத்தை முழக்கிக்கொண்டு, அகாலிதளத்தவரும், அவர்களது 'பஞ்சாப் சுபா' கோஷத்திற்கு எதிரான எதிர்ப்புக் கோஷங்களை முழக்கிக்கொண்டு 'மகா பஞ்சாப்' இயக்கத்தவர்களும் ஊர்வலமாகச் சென்று கொண்டிருக்கையில் அவர்களிடையே கலவரம் ஏற்பட்டதாம். கலவரத்தை அடக்குவதில் முனைந்த போலீசார் கண்ணீர்ப்புகை பிரயோகமும், அடுத்து துப்பாக்கிப் பிரயோகமும் செய்திருக்கின்றனர். துப்பாக்கிப் பிரயோகத்தினால் யாருக்கும் சேதமில்லை என்று கூறப்பட்டது.

சேரி ஒழிப்புத் திட்டங்கள்

மாநிலங்களுக்கு மானியம் வழங்க மத்திய சர்க்கார் இணக்கம்

புதுடில்லி, ஏப். 18—

இந்திய சர்க்காரின் சேரி ஒழிப்புத் திட்டங்களுக்கு என மத்திய சர்க்கார் நிதி இலாகாவும், திட்டக் குழுவும், மாநில சர்க்கார்களுக்குச் சிறிது மானியம் வழங்க இணங்கக்கூடும் என்று மக்கள் சபையில் அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

★

'மகா பஞ்சாப்' மாநில கோரிக்கை

பஞ்சாப் மந்திரி சபையின் ஆதரவு

சாந்திகார், ஏப். 19—

பஞ்சாப் மாநில முதல் மந்திரியான பீம்சேன் சச்சார், தனது சக மந்திரிகளின் ஆதரவுடன், 'மகா பஞ்சாப்' மாநிலக் கோரிக்கையை மாநில புனரமைப்புக் குழுவிடம் வலியுறுத்தியிருக்கிறார் என்று தெரிகிறது.

குழுவினர், நேற்று மாநிலத் தலைநகரில் பலருக்கு பேட்டியளித்திருக்கின்றனர்.

பஞ்சாப் மாநிலத்துடன்—அடுத்திருக்கும் பெப்சு, இமாசலப் பிரதேசம், டில்லியின் சில பகுதிகள் இவற்றையும் சேர்த்து 'மகா பஞ்சாப்' மாநிலம் தேவை என ஏற்கனவே பஞ்சாப் சர்க்கார் மாநில புனரமைப்புக் குழுவிடம் அறிக்கை தந்துவிட்டிருக்கிறது.

"வட இந்தியாவின் கேந்திர எல்லைப்பகுதியில் நிலையான நிர்வாகமும், பொருளாதார வசதியும் நிலவ இந்த மூன்று மாநிலங்களும் ஒன்றாக இணைக்கப்படுவது சிறந்ததாகும்," என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறதாம்.

இந்த 'மகா பஞ்சாப்' மாநிலம் 2 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகையுடையதாக இருக்கும்; நிலப் பரப்பு சுமார் 50 ஆயிரம் சதுர மைல்களாயிருக்கும்.

"இம்மாதிரி ஒன்றாக மூன்று மாநிலங்களும் இணைக்கப்பட்டால், இந்தப் பகுதி மக்களைப் பிரித்து வைக்கும் சிறு சிறு சச்சரவுகள் ஒழியும்," என்றும் பஞ்சாப் மந்திரிகள் கருதுகின்றனராம்.

"இம்மாதிரி இணைக்கப்படுவதினால், மொழிப் பிரச்சினை எழும் என்பது தங்களுக்குத் தெரியும் என்றும், இதற்காகத்தான், ஒரே மாநிலமாயிருந்தாலும் அங்கு இரு மொழிகள் இருக்கலாம் என்று தாங்கள் கூறுவதாயும், மந்திரிகள் தெரிவித்திருக்கின்றனர்

அகாலி தளத்தவர் கோருகிறபடி, மாநில எல்லைகள், மொழிவழியாக மட்டும் திருத்தி அமைக்கப்படுவதை தாங்கள் கடுமையாக எதிர்ப்பதாகவும், மந்திரி சபையினர் தெரிவித்துள்ளனராம்.

கைத்தறித் துணி விலையில் தள்ளுபடி

2 ரூ. துணி வாங்குபவர்களுக்கும் கிடைக்கும்

'கைத்தறித் துணி வாங்குபவர்கள், விலையில் தள்ளுபடி பெறுவதற்குக் குறைந்த பட்சம் ஐந்து ரூபாய் மதிப்புக்காவது கைத்தறித் துணி வாங்கவேண்டும்,' என்று இதுவரை இருந்துவந்த ஏற்பாட்டை மாற்றி, இனி, இரண்டு ரூபாய்க்குக் குறையாமல் வாங்குபவர்களுக்கும் விலையில் தள்ளுபடி செய்து கொடுக்கப்படும். அகில இந்திய கைத்தறி போர்டின் சிபாரிசின் பேரில் இந்திய சர்க்கார் இந்த முடிவை செய்துள்ளனர்; இதை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று எல்லா மாநில சர்க்கார்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

சூரிய கிரகணம்: ஆராய நிபுணர்கள் முயற்சி

வரும் ஜூன் மாதம் 20-ந் தேதி இலங்கையில் தெரியும் சூரிய கிரகணத்தை ஆராயவும், படம் பிடிக்கவும் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் திட்டமிட்டிருக்கிறார்கள்.

தோழர் தாமோதரன்-தோழியர் மோகனு சீர்திருத்த விதவைத் திருமணம்

சென்னை, திருவல்லிக்கேணி, கோவிந்தசாமி (செட்டியார்) சத்திரத்தில், 6—4—55-ல், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்கள் முன்னிலையிலும், தோழர் டி. சண்முகம் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையிலும் திருமணம் செய்துகொண்ட மணமக்கள்.

சீர்திருத்த-விதவைத் திருமணம் செய்துகொண்ட தோழர் தாமோதரன் அவர்களையும், மணமகள் தோழியர் மோகனு அவர்களையும் பாராட்டி, பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் கா. அப்பாத்துரையார், இறையண்ணல், தோழியர் அலமேலு-அப்பாதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் தோழியர் சத்தியவாணிமுத்து

★

கும்பகோணம்

9—4—55 மாலை 6 மணிக்கு கும்பகோணம் பூங்காவில், தோழர் பொ. நாராயணசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் எல். டி. கிட்டப்பா, கே. கே. நீலமேகம் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின், தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் 'தற்கால அரசியல்' என்பது குறித்து நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

மாயூரம்

10—4—55 மாலை 6 மணிக்கு, மாயூரம் நகர தி. மு. கழகச் சார்பில், நகரப் பூங்காவில் தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் அடைக்கலம், நாராயணசாமி, என். எஸ். இளங்கோ ஆகியோர் பேசிய பின், தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள், காங்கிரசின் 'சோஷலிச மாதிரி சமுதாய அமைப்பு' என்பதன் அலங்கோலத்தையும், எதற்கெடுத்தாலும் டெல்லிக்குக் காவடி தூக்கிச் செல்லும் தென்னாட்டுக் காங்கிரசாரின் இழிநிலை குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

நெடுங்குளம்

11—4—55 மாலை நெடுங்குளம் திடலில், தி. மு. கழகச் சார்பில், தோழர் என் கிட்டப்பா தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் சீர்திருத்தத்தின் அவசியம் குறித்தும், இந்து மதக் கடவுள்களின் தன்மைகள் குறித்தும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார். கூட்ட இறுதியில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு நெடுங்குளம் தி. மு. கழகச் சார்பில் 101 காலணாவும், தோழர் வை நடேசன் அவர்களால் 33 காலணாவும் நன்கொடை தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

உள்ளிக்கோட்டை

13—4—55 மாலை 6 மணிக்கு இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சிங்காரவேலு, நாராயணசாமி, என். எஸ். இளங்கோ ஆகியோர் பேசியபின், தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் மாநில ஆட்சியின் அடிமைத் தனத்தையும், 'மாதிரி சோஷலிசம்' பேசும் நேரு சர்க்காரின் முதலாளித்துவத் தன்மைகளைக் குறித்தும் விளக்கமாகப் பேசினார். கூட்ட இறுதியில் தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் என். எஸ். இளங்கோ, நாராயணசாமி ஆகியோருக்கு உள்ளிக்கோட்டை தி. மா. மு. கழகச் சார்பில் வாழ்த்திதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

இராதாநரசிம்மபுரம்

14—4—55ல், இவ்வூர் செஞ்சதுக்கத்தில், மன்னை தோழர் ப. நாராயணசாமி தலைமையில் நடைபெற்ற தி.மு கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர் என். எஸ். இளங்கோ, திராவிடநாடு பிரிய வேண்டிய அவசியத்தையும், ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதை புள்ளி விபரங்களுடன் எடுத்துக் காட்டியும், 'ஏக இந்தியா' பேசும் காங்கிரஸ் வட்டாரத்திலும் இந்தக் குமுறல் மறைத்தும் — மறைக்க முடியாத அளவு வளர்ந்து நிற்பதை குறிப்பிட்டுப் பேசியதுடன், தென்னாட்டு மக்கள் நல்வாழ்வு பெற திராவிட நாடு பெறுவதுதான் சிறந்த வழியென்றும் விரிவுரையாற்றினார்.

அடுத்துப் பேசிய தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார், சமுதாயத்தில் இன்றுள்ள நிலையையும், திராவிட மக்கள் எந்த எந்த வகையில் கேவலமாக நடத்தப்படுகிறார்கள் என்பதையும் விளக்கியதுடன், பார்ப்பனீயத்தின் நயவஞ்சகத் தன்மையையும், இராமாயணம், பெரிய புராணம் ஆகியவற்றிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டியும், வடநாட்டுப் பிடியிலிருந்து தென்னாடு பிரிய வேண்டியதின் அவசியத்தையும், அந்த எழுச்சி இன்று கன்னட சட்ட சபையில் முழக்கமாக வெளிவருவதையும், மலையாளத்திலும் அந்தக் குரல் ஒலிக்கப்படுவதையும் விளக்கிக் கூறி, ஆவடி காங்கிரஸ் தீர்மானமான 'சோஷலிச மாதிரி' என்ற தீர்மானத்தின் பச்சோந்தித் தன்மையையும் விளக்கி விரிவுரையாற்றினார்.

இராசகோபாலபுரம் இளைஞர் முன்னேற்றக் கழகச் சார்பில் தோழர்கள் என். எஸ். இளங்கோ, ப. நாராயணசாமி ஆகியவர்களுக்கு மலர்மாலையும், தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையாருக்கு வரவேற்பு இதழும் வாசித்தளிக்கப்பட்டன. கூட்ட இறுதியில் தென்பரை தி மு கழகச் சார்பில் ரூ. 1-ம், இராசகோபாலபுரம் இளைஞர் முன்னேற்றக் கழகச் சார்பில் ரூ. 1-ம், 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு நன்கொடை அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

கைப்பற்றப்பட்ட கள்ளத் தங்கம்

மக்கள் சபையில் தகவல்

"சென்ற ஆண்டில் கோடிக்கணக்கானரூபாய் மதிப்புள்ள கள்ளத் தங்கம் சர்க்காரால் கைப்பற்றப்பட்டது. 1954-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் மட்டிலும் ஒரு தடவை ரூ. 13,17,000 பெறுமான தங்கமும், மற்றொருமுறை ரூ. 1,40,000 மதிப்புள்ள தங்கமும், அதே ஆண்டில் ஜூன் திங்களில் ரூ. 18,00,000 பெறுமான தங்கமும், நவம்பரில் ரூ. 5,52,000 பெறுமான தங்கமும் கைப்பற்றப்பட்டது.

"அண்மையில் டில்லியில் ரூ. 4,40,100 பெறுமான இந்தியக் கரன்சி நோட்டுகள் கைப்பற்றப்பட்டன.

மேற்கண்ட இத்தகவல்களையெல்லாம் மத்திய ரெவினியூ அமைச்சர் குகா, மக்கள் சபையில் தந்திருக்கிறார்.

****

முதல் முயற்சி!

மாநில மாநாட்டிற்காக தி. மு கழகம் 25 ஆயிரம் ரூபாய் பணம் திரட்டுவது என்ற பேரூர் தீர்மானத்தின் படி, சென்னையில், ஏப்ரல் 24-ந் தேதி மாலை, சென்னை, வண்ணாரப்பேட்டை, தியாகராயர் கல்லூரியில்,

புரட்சி நடிகர்,

M. G. இராமச்சந்திரன்

அவர்கள்

'ஆசை நினைவு'

எனும் நாடகத்தை நடத்தித் தர இசைந்துள்ளார்கள் என்பதைப் பெருமிதத்துடன் கூறிக்கொள்கிறோம். மாநில மாநாட்டுக்கு நிதி திரட்டும் முதல் முயற்சி இது; முதல் முயற்சி, நமக்கெல்லாம் பெருமை தரத்தக்கதாக, வெற்றிகரமாக அமைதல் வேண்டும்.

முதல் முயற்சியின் வெற்றியின் துணை கொண்டுதான், தொடர்ந்து பல காரியங்கள் நடந்தேற வேண்டியிருக்கிறது.

சென்னைத் தோழர்களிடம், முதல் முயற்சி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

பெருமைப்படத்தக்க விதமான வெற்றியைத் தேடித் தரும் பெரும் பொறுப்பு சென்னைத் தோழர்களுக்கு!

சென்னைத் தோழர்கள், வெற்றியைத் தேடித் தருவார்கள் என்ற நம்பிக்கை நாடெங்கும் இருக்கிறது!

தோழர்களே! இன்றிலிருந்தே பணியாற்ற வாருங்கள்!!

முதல் முயற்சி—ஏப்ரல் 24-ல்!

[குறிப்பு:—சென்னை 8—4—55 'நம் நாடு' இதழில் வெளியிடப்பெற்ற 'முதல் முயற்சி' அறிவிப்பில் கண்டுள்ளபடி தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் 'பகைவனின் காதலி' நாடகம் நடைபெறும், என்றிருப்பதற்குப் பதிலாக 'ஆசை நினைவு' நாடகம் என மாற்றிப் படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். தவறுக்கு வருந்துகிறோம்.—ஆ-ர்.]

****

அமெரிக்க 'ஒற்றர்' போலந்தில் கைது!

சில அமெரிக்கர்கள், போலந்து நாட்டில் 'ஒற்றர்' வேலையில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறதாம்.

போலந்தில் அமெரிக்கர் ஈடுபடுத்தியிருக்கும் ஒற்றர் கூட்டத்தின் தலைவன் என்று கருதப்படுபவரும், வேறு சிலரும் கைதாகியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விந்தியப் பிரதேசத்தில் வைரச் சுரங்கம்

இந்திய சர்க்காரின் முயற்சி

விந்தியப் பிரதேசத்தில் நடைபெறும் வைரச் சுரங்கவேலை பற்றி ஆராய்ந்து அறிந்து சிபாரிசுகள் செய்வதற்காக இந்தியப் பேரரசு 8 பேர் கொண்ட விசாரணைக் குழு ஒன்றை நியமித்துள்ளது.

வைரச் சுரங்க வேலைகளை அபிவிருத்தி செய்வதற்கான சிபாரிசுகளுடன், இந்தக் குழு, வரும் ஜூன் திங்களுக்குள் தனது அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டுமாம்.

மத்திய சர்க்காரின் புது வரிச் சலுகைகள்

மக்கள் சபையில் தகவல்

மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் தேஷ்முக், மக்கள் சபையில் சில புதிய வரிச் சலுகைகளை வெளியிட்டிருக்கிறார். இந்தப் புதிய வரிச் சலுகைகளின் காரணமாக சர்க்காருக்கு ரூ 8.83 கோடி வருமான நஷ்டம் ஏற்படுமாம்.

ஏற்கனவே வருமானக் குறைவாகக் கணக்கிடப்பட்ட ரூ. 8.47 கோடியுடன், இத்தொகையும் சேர்ந்து மொத்தம் ரூ. 17.35 கோடி வருமானக் குறைவு சர்க்காருக்கு ஏற்படுகிறது.

வரவு—செலவு திட்டத்தின் போது உயர்ந்த ரக மெல்லிய மில் துணிகளுக்கு, சதுர கெஜம் ஒன்றிற்கு போடப்பட்டிருந்த 2½ அணா வரி இப்போது 2 அணாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், சாதாரண மெல்லிய ரக ஆலைத் துணிகளுக்கு வரவு—செலவுத் திட்டத்தில் குறைக்கப்பட்டிருந்த வரி, இப்போது, கெஜம் ஒன்றிற்கு 1½ அணா என்றிருந்த பழைய கணக்கிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

கைத்தறிக்கு உதவியளிக்கும் வகையில் ஆலைத் துணிக்குப் போடப்படும் 'செஸ்' வரி, கெஜத்திற்கு மூன்று பைசா என்றிருப்பது, சதுர கெஜத்திற்கு 3 பைசா என்று உயர்த்தப்படும்—இதனால் இத்துணி மீது வரி அதிகப்படுகிறது;

கம்பளித் துணிகளுக்கு விலை மதிப்பில் 10 சத விகிதம் போட்டிருந்த வரி இனிமேல் 6 சத விகிதமாகக் குறைத்துக் கொள்ளப்படும்; ரூ. 10-க்குக் குறைவான முரட்டுக் கம்பளிப் போர்வைகளுக்கு வரியே இராது;

கார்கள், பாட்டரி விளக்குகள், சைக்கிள் விளக்குகள் போன்ற சிறிய மின்சார விளக்குகளுக்கு வரி கிடையாது, ஆனால் மின்சார விசிறிகளின் பாகங்கள் தனியே விற்கப்பட்டாலும் அவற்றிற்கு வரி விதிக்கப்படும்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

எப். 24: சென்னை — பொதுக் குழு
26: மட்டியூர் (கும்ப கோணம்)
27: மேட்டுப்பாளையம் (திருத்துறைப்பூண்டி)
28: வடுவூர்
29: குற்றாலம்
30: போடிநாய்க்கனூர்
மே 1: பத்தமடை

கழகக் கூட்டம்

★

அம்மையப்பன் கடைத்தெருவுக்கு அருகில்
22—4—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: வே. சோமசுந்தரம்
பேசுபவர்:
ஈ. வெ கி. சம்பத்

வடசென்னை முற்போக்கு வாலிபர் மன்றம்

22—4—55 மாலை 6 மணிக்கு சென்னை, இராயபுரம், இராமாநாய்க்கன் தெரு, மீனாட்சியம்மன் பேட்டையில், மேற்படி மன்ற ஆண்டு விழாப் பொதுக்கூட்டம், தோழர் தி. ந. மதிவாணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், வி. எஸ். கோவிந்தராசன், முகவை ஆர். எஸ். பாண்டியன், இராசன் ஆகியோர் பேசுவர்.

பேராசிரியர் சுந்தரனார் நூற்றாண்டு விழா

21—4—55 மாலை 6 மணிக்கு. சென்னை, இராயபுரம், எண் 59, மன்னார்சாமி கோயில் தெரு, வடசென்னை குறள் நெறிக் கழகத்தில், தோழர் ஆனந்தன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

பம்பாய் துறைமுகத் தொழிலாளர் தகராறு

பேச்சுவார்த்தையில் நிர்வாகிகள் முடிவு

பம்பாய் துறைமுகத்தில் எண்ணெய் சேகரிப்பு நிலையமொன்றைக் கட்டுவதில் ஈடுபட்டுள்ள டச்சு கம்பெனி ஒன்றிற்கும், அதில் பணி புரியும் தொழிலாளர்களுக்குமிடையில்கடந்த 20 தினங்களாக நடைபெற்றுவந்த தகராறு முடிவடைந்திருக்கிறது.

பம்பாய் 'டிரக்' தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், அந்தக் கம்பெனி நிர்வாகிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள், அந்தத் தகராறை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்துள்ளன.

தகராறில் சம்மந்தப்பட்டுள்ள 2,000 தொழிலாளர்களில் 60 சத விகிதத்தினரை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வதாயும், கடந்த 11 நாட்களுக்கு முன் மூடிய கதவுகளைத் திறப்பதாகவும் நிர்வாகிகள் சம்மதம் தந்துள்ளனராம்.

எஞ்சியுள்ள தொழிலாளர்களையும் வேலையில் அமர்த்துவதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றுவருவதாக சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் கூறியிருக்கிறார்.

ஐ. சி. எஸ். அய்யரின் அப்பீல் மனு விசாரணை

புதுடில்லி, எப். 19—

இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்டு, விசாரணையில் ஆறு மாத வெறுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்ற எஸ். வ. வெங்கடராமன் என்ற முன்னாள் ஐ சி. எஸ். அதிகாரி, தமக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை ஆட்சேபித்துச் செய்துகொண்டுள்ள மனுவை பஞ்சாப் உயர்நீதி மன்ற நீதிபதி கோசலா விசாரணைக்கு எடுத்துக் கொண்டார்.

மனுதார் சார்பில் வழக்கறிஞர் பேச ஆரம்பித்தபோது, நீதிபதி குறுக்கிட்டு, 'தண்டனையை ஏன் அதிகரிக்கக் கூடாது,' என்பதற்கும் வழக்கறிஞர் ஆதாரங்கள் காட்டவேண்டும் என்றும் கூறினார்.

"குற்றங்களின் தன்மைகளையெல்லாம் கவனிக்கும்போது அவருக்கு அளிக்கப்பட்டுள்ள ஆறு மாத வெறுங்காவல் தண்டனை மிக சொற்பமான ஒன்றுதான்," என்றும் நீதிபதி கூறியிருக்கிறார்.

எதிரி, பொருட்களை வாங்கின விதமே மிகவும் விசித்திரமானதாக இருக்கிறது என்றும், அவற்றிற்குப் பணம் கொடுத்தது யார் என்பதைக் கூட எதிரி கவனிக்கவில்லை என்றும் நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.

தி. மு. கழகப் பொதுக் குழு

"24—4—55-ல்சென்னை, வண்ணாரப்பேட்டை தியாகராயர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழகப் பொதுக் குழுவிற்கான ஏற்பாடுகளை சென்னை மாவட்ட தி. மு. கழகம் சிறப்புற கவனித்து வருகிறது.

வெளியூர்களிலிருந்து வரும் பொதுக்குழு உறுப்பினர்களை வரவேற்க சென்னையின் இரு முக்கிய (சென்ட்ரல், எழும்பூர்) புகை வண்டி நிலையங்களிலும் 24—4—55 காலைமுதல் கழகச் சின்னம் அணிந்த தொண்டர்கள் அணிவகுத்து நிற்பர். வெளியூர் பொதுக்குழு உறுப்பினர்கள் கழகத் தொண்டர்களின் வாயிலாக தியாகராயர் கல்லூரியை அடைவதற்கான வழியையும், வசதியையும் பெற்றுக்கொள்ளலாம்,"

என்று சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

★★★★★★ ★★★★★★★★★★★

ஏழு ஆண்டுகளில் ஆறு மந்திரி சபைகள்

மத்திய பாரத் காங்கிரசார் தகராறு!

புது மந்திரி சபை அமைகிறது

குவாலியர், எப். 18—

கடந்த ஏழாண்டுகளில் ஆறாவது மந்திரி சபையாக மத்திய பாரத் மாநிலத்தில் எட்டுப் பேர் கொண்ட மந்திரி சபை ஒன்று தக்கட்மால் ஜெயின் என்பவர் தலைமையில் பதவி ஏற்றுள்ளது. இதற்கு முன்பு முதன் மந்திரியாயிருந்த கங்குவால் மந்திரி சபையில் இடம் பெற்றிருந்த எல்லா மந்திரிகளும் இந்தப் புது மந்திரி சபையிலும் இடம் பெற்றுள்ளனர்.

முதன் மந்திரி பதவிக்காக, தாக்கட்மால் ஜெயின், கங்குவால் ஆகிய இருவர் தலைமையிலுமுள்ள சட்ட சபை காங்கிரஸ் குழுவினரிடை பலமான தகராறுகள் இருந்துவந்தது நினைவிருக்கலாம்

★

ஆடம்பர வாழ்வை வெறுப்பாராம்!

காந்திய எளிய வாழ்வை மேற்கொள்ளுவாராம்!

மத்திய பாரத் மாநிலத்தின் புதிய முதன் மந்திரியான தக்கட்மால் ஜெயின், இனி ஆடம்பர வாழ்க்கையை வெறுத்து காந்திய எளிய வாழ்க்கையைமேற்கொள்ளுவாராம்.

தனது பங்களாவில் உள்ள சோபாக்கள் போன்ற பெரும் ஆடம்பரப் பொருள்களை எல்லாம் அகற்றிவிட உத்தரவிட்டிருக்கிறாராம்.

இந்தூரில் இருக்கும்போது, தனக்கு, ஒரு மத்திய தரக் குடும்பம் வசிக்கும் சிறியதொரு வீடே போதுமானதென்று கூறியிருக்கிறாராம்.

முன்னாள் முதன் மந்திரியான மிஷ்ரிலால் கங்குவால் வசித்த பெரும் பங்களாவில் தனக்கு ஒரு அறை மட்டும் போதுமானது என்று கருதுகிறாராம்.

'சிக்கனமாகப் பெட்ரோல் சாப்பிடும்' ஒரு சிறிய கார் தனக்குப் போதுமானது—'பெரிய கார்கள் தேவையில்லை,' என்று கூறிவிட்டிருக்கிறாராம் அவர்.

புனர் வாழ்விப்பு நிதி உதவி நிர்வாக நிலையம், 1955 பிப்ரவரி மாத இறுதிவரை, இடம் பெயர்ந்தவர்களுக்குக் கடனுதவியாக மொத்தம் ரூ. 9,35,91,000 பட்டுவாடா செய்திருக்கிறது.

தேவை ஆயிரக்கணக்கில் —

சிறு சிறு துளியெனச் சேர்ப்போம், தோழர்காள்!

✶

நாட்டின் தலைநகர் சென்னையில்-

துவங்குகிறது துளிகளைச் சேர்க்கும் சீரிய முயற்சி

✶

24—4—1955 ஞாயிறு மாலை 6–30 மணிக்கு
முதல் முயற்சியின் முரசு ஒலிக்கிறது!

சென்னை, வண்ணையம்பதி,

தியாகராயர் கல்லூரி கலா மண்டபத்தில்

M. G. R. நாடக மன்றத்தினரின்

'ஆசை நினைவு'

M. G. இராமச்சந்திரன், M. G. சக்கரபாணி, G. சகுந்தலா
முதலியோர் பங்கேற்கின்றனர்

கட்டணம்: ரூ. 3, 2, 1, அணா 12

தோழர்கள் கொடுக்கும் சிறு சிறு தொகைதான்—எதிர்காலத்தை எழிலுள்ளதாக்கத் திட்டங்கள் தீட்டிக் கொடுக்கும்

மாநில மாநாடு

—தி. மு. கழக நலமை நிலையம்

300 கோடி கெஜம் இறக்குமதி 30-லட்சம் கெஜமாகக் குறைந்தது!

இந்தியாவில் பிரிட்டன் துணி இறக்குமதி நிலை

"முன்பு, பிரிட்டன், இந்தியாவிற்கு 300 கோடி கெஜம் துணி ஏற்றுமதி செய்தது; ஆனால், இப்போதோ, துணி ஏற்றுமதியின் அளவு 30 லட்சம் கெஜமாகக் குறைந்துவிட்டது. இப்போது, இந்தியா, பிரிட்டனுக்குத் துணியை ஏற்றுமதிசெய்து வருகிறது.

"பிரிட்டனின் துன்பங்களை நாம் நன்குணர்ந்து, அதற்கு நிவாரணம் அளிக்கவேண்டியது மிக அவசியமாகும். பரிகாரத்திற்கு அவர்கள் கூறும் யோசனையை நாம் மாற்றவோ அல்லது நிராகரிக்கவோ செய்யலாம் — ஆனால் அவர்களுடன் சண்டையிட முடியாது; முன்பெல்லாம், வாரத்தில் 7 நாட்கள் ஆலைகள் வேலை செய்ததுபோக, இப்போது 4 அல்லது 5 நாட்கள்தான் வேலை செய்கின்றன; இதனால் வேலையில்லாப் பிரச்சினை கிளம்பியிருக்கின்றது; இதற்கும் பரிகாரம் அளிக்க வேண்டியது அவசியமாகும்"

இவ்வாறு, இந்திய அயல்நாட்டு வர்த்தகக் குழுக் கூட்டத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில், இந்திய சர்க்கார் வர்த்தக, கைத்தொழில் இலாகா செயலாளர் எச். வி. ஆர். அய்யங்கார் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தான் அகதிகளுக்கு சென்னை அரசினர் தந்த 'பெட்டிக் கடை'கள்

ஏலத்தில் விடப்படுமாம்!

பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்த அகதிகளுக்கு வாழ்வளிப்பதற்காக, சென்னை சர்க்கார், சென்னை நகரின் பல இடங்களில் மொத்தம் 40 'பெட்டிக் கடை'கள் கட்டித் தந்துள்ளதாம். இவற்றில் 21 கடைகள் இன்னும் காலியாகக் கிடப்பதாக சென்னை நகர சபை கமிஷனர் அறிவித்திருக்கிறார்.

காலியாகக் கிடக்கும் அக்கடைகளை பகிரங்க ஏலத்தில் வாடகைக்குவிட சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்.

1954-ம் ஆண்டில், இந்தியாவில் மொத்தம் சுமார் 2,40,794 அவுன்ஸ் தங்கம் உற்பத்தி செய்யப்பட்டது; அதே ஆண்டில் மொத்தம் சுமார் 37,33,719 டன் கனி இரும்பு உற்பத்தி ஆயிற்று என்று மக்கள்சபையில்அறிவிக்கப்பட்டது

வடிமுனைக் குழாய்க் கிணறுகள்: புதிய சோதனை

வடிமுனைக் குழாய்க் கிணறுகளில் பித்தளைக் கம்பி வடிகட்டிக்குப் பதிலாக நார் உபயோகித்து சென்னை சர்க்கார் விவசாய இலாகா சோதனைகள் நடத்தி வருவதாகத் தெரிகிறது.

இந்தப் புதிய முறை வடிமுனைக் குழாய்க் கிணறுகளில், சாதாரண வடிமுனைக் குழாய்க் கிணறுகளைக் காட்டிலும் இரு மடங்கு தண்ணீர் கிடைப்பதுடன், செலவும் மிகக் குறைகிறது என்றும், அதற்கு உபயோகிக்கப்படும் நாரும் அதிக நாள் கெட்டுப் போகாமல் நீடித்திருக்கிறதென்றும் சோதனையின் மூலம் தெரியவருகிறதாம்.

பித்தளைக் கம்பி வடிகட்டிகளுடன் கூடிய வடிமுனைக் குழாய்க் கிணறுகளின் மூலம் வெற்றியடையாத மாவட்டங்களில்—(சேலம், கோவை மாவட்டங்களில்) இந்த முறை சோதனை செய்யப்படுகிறதாம்.

பம்பாய் — கன்னியாகுமரி நெடுஞ்சாலை

"அடுத்த ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள், பம்பாயிலிருந்து கன்னியாகுமரிவரை உள்ள நெடுஞ்சாலை அபிவிருத்தி செய்யப்படும்," என்று இரயில்வே உதவி மந்திரி ஓ. வி. அழகேசன் டில்லி மேல் சபையில் தெரிவித்திருக்கிறார்.

அபிவிருத்தி வேலைகளுக்கு சுமார் 5·5 கோடி ரூபாய் செலவாகலாமெனவும், இந்தச் செலவை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமெனவும் அவர் கூறியிருக்கிறார்.

உடனே தேவை

'நம் நாடு' அலுவலகத்தில் வேலை செய்ய, சைக்கிள் விடத் தெரிந்த பையன்கள் தேவை. விவரத்திற்கு நேரில் சந்திக்கவும்.

பொறுப்பாளர்,
'நம் நாடு'

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.